<u>தமிழ்நாடு அரசு</u>

<u>போக்குவரத்து துறை</u>

<u>பழகுநர் உரிமம் பெறுவதற்கான தேர்வுத் தாள்</u>

<u>தாள்-1</u>

<u>கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானவற்றின் வரிசை எண்ணை வினாக்களுக்கு பக்கத்தில உள்ள கட்டத்தில் குறிப்பிடவும்</u>

| மனுதாரரின் பெயர் மற்றும் விலாசம் |
|---|
| |

அ. பழகுநர் உரிமம் பெற்ற நீங்கள் வாகனத்தை ஓட்டும்பொழுது:-

1. உடன் ஓட்டுநர் உரிமம் பெற்ற நபர் கண்டிப்பாக இருக்க வேண்டும்
2. தனியாகவே ஓட்டலாம்
3. உடன் ஓட்டுநர் உரிமம் பெற்ற நபர் இருப்பதுடன் வாகனத்தின் முன்னும் பின்னும் பழகுநருக்கான எச்சரிக்கை சின்னம் பொருத்தப்பட்டிருக்கவேண்டும்.

ஆ) கொடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைச் சின்னம் எதனைக் குறிக்கிறது?



1. வாகனங்கள் மெதுவாகச் செல்லவும்
2. செங்குத்தான ஏறும் பாதை
3. சிறிய வாகனங்கள் மட்டும் செல்லும் பாதை

இ) கொடுக்கப்பட்டுள்ள தகவல் சின்னம் எதனைக் குறிக்கிறது?



1. குறுக்குப் பாதை
2. மருத்துவமனை
3. முதல் உதவி அளிக்கும் இடம்

ஈ) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் -

1. தமிழ் நாட்டில் மட்டுமே வாகனம் ஓட்ட அனுமதியாகும்
2. இந்தியா முழுவதும் வாகனம் ஓட்ட அனுமதியாகும்
3. அண்டை மாநிலங்களில் மட்டும் ஓட்டலாம்

உ) கொடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைச் சின்னம் எதனைக் குறிக்கிறது?



1. எதிர் வரும் சாலை குறுகலானது
2. சாலையின் முடிவுப்பகுதி
3. எதிர் வரும் சாலை அகலமானது

ஊ) வாகனத்தை ஓட்டுச் செல்லும்போது சிகப்பு அல்லது நீலநிற விளக்கு பொருத்திய அவசரகால வாகனம் எதிர்ப்பட்டால் உடனடியாக செய்ய வேண்டியது.

1. வாகனத்தை அதே இடத்தில் நிறுத்திவிட வேண்டும்.
2. வாகனத்தின் வேகத்தை குறைத்து இடதுபுறத்தின் ஓரத்திற்கு சென்றுவிட வேண்டும்.

3. வாகனத்தின் வேகத்தை அதிகரித்து முந்திச் சென்றுவிட வேண்டும்.

எ) கொடுக்கப்பட்டுள்ள கட்டளைச் சின்னம் எதனைக் குறிக்கிறது



1. வாகனங்கள் செல்லத் தடை
2. கனரக வாகனங்கள் செல்லத் தடை
3. கனரக வாகனங்கள் நிறத்தி வைக்கத் தடை

ஏ) சாலையில் அடுத்த வாகனம் உங்கள் வாகனத்தை முந்தும்போது -

1. வாகனத்தின் வேகத்தை அதிகரித்து வேகமாகச் சென்றுவிட வேண்டும்
2. உங்கள் வாகனத்தின் வேகத்தை குறைத்து இடதுபுறம் ஒதுங்கி முந்தும் வாகனத்திற்கு வழி விட வேண்டும்.
3. உங்கள் வாகனத்தை சாலையில் இடதுபுறத்திற்கு கொண்டுசென்று நிறுத்திவிடவேண்டும்.

ஐ) கொடுக்கப்பட்டுள்ள உத்திரவுச் சின்னம் எதனைக் குறிக்கிறது?



1. மாட்டு வண்டி செல்லத் தடை
2. குதிரை வண்டி செல்லத் தடை
3. மாட்டு வண்டி மட்டும் செல்லலாம்.

ஒ) கொடுக்கப்பட்டுள்ள தகவல் சின்னம் எதனைக் குறிக்கிறது



1. மருத்துவமனை
2. ஓய்வெடுக்கும் இடம்
3. தங்கும்விடுதி

| மதிப்பெண்கள் | |
|---|---|
| | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - |

பதில்கள்:

(அ) 3 (ஈ) 2 (எ) 2 (ஒ) 2
(ஆ) 2 (உ) 3 (ஏ) 2
(இ) 3 (ஊ) 2 (ஐ) 2